

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க சட்டமேதை அம்பேத்கர் அவர்களின் 69 வது நினைவு தினத்தையொட்டி வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி முகாம் அலுவலகத்தில் அம்பேக்கரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார் . தொடர்ந்து பன்னீர்செல்வம் பூங்காவில் அமைந்துள்ள அம்பேத்கரின் முழு திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினார். நிகழ்வில் மாநிலங்களவை உறுப்பினரும், கழகத் துணைப் பொதுச் செயலாளருமான அந்தியூர் ப.செல்வராசு, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், கழக நெசவாளர் அணி செயலாளர் எஸ்.எல்.டி.ப.சச்சிதானந்தம் உள்ளிட்ட மாநில, மாவட்ட, மாநகர, பகுதி கழக நிர்வகிகள், மண்டல குழு தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திமுக கரூர் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் குமரன் கருணாநிதி, தந்தையார் முன்னாள் திண்டுக்கல் மாவட்ட தொ.மு.ச. தலைவர் பெ. கருப்பையா அவர்களின் மறைவையொட்டி, அன்னாரது திருவுருவப்படத்திற்கு கரூர் மாவட்ட தி.மு.க. செயலாளர் வி. செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. நேரில் சென்று மலரஞ்சலி செலுத்தினார். குடும்பத்தாருக்கு ஆறுதலை தெரிவித்தார். மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் திருச்சி கேசவன், மாவட்ட துணைச் செயலாளர் பூவை ரமேஷ் பாபு, மண்டல குழு தலைவர் வெங்கமேடு சக்திவேல், மாநகர பகுதி செயலாளர் பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### சங்ககிரி – எடப்பாடியில்

# சிறு விளையாட்டரங்க திட்டப் பணி தொடக்க விழா!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் பங்கேற்பு!

சென்னை, டிச. 11–

முதலமைச்சர் காணொலிக் காட்சியின் வாயிலாக சேலம் மாவட்டத்தில் சங்ககிரி மற்றும் எடப்பாடியில் சிறு விளையாட்ட ரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்ததைத் தொடர்ந்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்றார்.

முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக 08.12.2025 அன்று சேலம் மாவட்டம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் சார்பில் சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி கிராமத்தில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் சிறு விளையாட்டரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைத்தார்.

இதனைத்தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு தெரிவித்ததாவது:

துணை முதலமைச்சர் அவர்கள் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறையின் சார்பில் ஒவ்வொரு சட்டமன்ற தொகுதியிலும் சிறு விளையாட்டரங்கம் அமைக்கப்படும் என்ற அறிவித்தார்கள். அந்தவகையில், சட்டமன்ற தொகுதிகளில் விளையாட்டு வீரர்களின் உடற்தகுதி மற்றும் விளையாட்டு வளர்ச்சியினைத் தூண்டும் வகையில் சிறு விளையாட்டு அரங்கம் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதன்படி, சேலம் மாவட்டத்தில் சங்ககிரி வட்டம், வடுகப்பட்டி கிராமத்தில் ரூ.2.62 கோடி மதிப்பீட்டிலும் மற்றும் எடப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் ரூ.3 கோடி மதிப்பீட்டிலும் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு சிறு விளையாட்டரங்கம் அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு முதலமைச்சர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோரால் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக இன்றையதினம் அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கிடையே விளையாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிக்கும் வகையில் அமைக்கப்படும் இச்சிறு விளையாட்டரங்கத்தில் ஓடுகளம், கேலரி, கூடைப்பந்து மைதானம், கால்பந்து மைதானம், கையுந்துபந்து மைதானம், கோகோ மைதானம், கபடி மைதானம் மற்றும் உடற்பயிற்சி கூடம் ஆகிய விளையாட்டு திடல்கள் அமைக்கப்படவுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா.பிருந்தா தேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி ப.மகேஸ்வரி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் எஸ்.சிவரஞ்சன், நகர்மன்ற தலைவர் டி.எஸ்.எம்.பாஷா உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் 1831 மாணவ – மாணவிகளுக்கு

# ரூ.83 லட்சம் மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டிகள்!

### எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ. வழங்கினார்!

பெரம்பலூர்,டிச, 11–

தமிழக அரசின் திட்டங்கள் உடனடியாக பயனாளிகளுக்கு சென்று சேர வேண்டும் எனும் நோக்கில், தமிழக அரசின் முத்தான திட்டங்க ளும் ஒன்றான மாணவ, மாணவி களுக்கு விலையில்லா மிதிவண்டி கள் வழங்கும் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தொடர் மழையிலும் 1831 மாணவ– மாணவிகளுக்கு 28–11–2025, 01–12–2025, 02–12–2025 ஆகிய மூன்று நாட்களில் ரூ.82 இலட்சத்து 94 ஆயிரத்து நானூற்று முப்பது மதிப்பீட்டில் விலையில்லா மிதிவண்டி களை பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் வழங்கினார்.

வேப்பந்தட்டை அரசினர் மேல்நிலைப்பள்ளி, வெங்கலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, அரும்பாவூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, பூலாம்பாடி அரசினர் மேல்நிலைப் பள்ளி, புனித தோமினிக் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ,

எளம்பலூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, கவுல்பாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி , சிறுவாச்சூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, சத்திரமனை அரசினர் மேல்நிலைப்பள்ளி, களரம்பட்டி ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளி,

அம்மாபாளையம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, மேலப்புலியூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி, எசனை அரசினர் மேல்நிலைப் பள்ளி, அனுக்கூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , ரஞ்சன்குடி அரசினர் மேல்நிலைப்பள்ளி , அன்னமங்கலம் சிறுமலர் மேல்நிலைப் பள்ளி , நெற்குணம் அரசினர் மேல்நிலைப்பள்ளி ,

கை. களத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , வ. களத்தூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி , செட்டிக்குளம் அரசினர் மேல்நிலைப் பள்ளி, நக்கசேலம் அரசினர் மேல்நிலைப்பள்ளி, தேனூர் அரசினர் மேல்நிலைப்பள்ளி ,

நத்தக்காடு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவிகள் பயன் பெறும் வகையில் இலவச மிதிவண்டிகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் பெரம்பலூர் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுவாமி முத்தழகன், மாவட்ட பிற்படுத்தப் பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மை நல அலுவலர் சுரேஷ்குமார், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ. ஜெகதீசன், மாவட்ட துணை செயலாளர்கள் டி. சி. பாஸ்கர் நூருல்ஹிதா இஸ்மாயில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் – பெரம்பலூர் ஒன்றிய கழக செயலாளர் எம். ராஜ்குமார், வேப்பந்தட்டை மேற்கு ஒன்றிய கழக செயலாளர் செ.நல்லதம்பி

வேப்பந்தட்டை கிழக்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் ந. ஜெகதீஸ்வரன், ஆலத்தூர் மேற்கு ஒன்றிய கழக பொறுப்பாளர் மருத்துவர் செ. வல்லபன் மற்றும் ஆசிரியப் பெருமக்கள், மாணவர்கள், மாணவிகள், அரசு அதிகாரிகள் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### கோவை மாவட்டம், உக்கடம்

# வரசித்தி விநாயகர் கோயிலுக்குச் சொந்தமான ரூ.100 கோடி சொத்துகள் மீட்பு!

### இந்து சமய அறநிலையத்துறை துரித நடவடிக்கை!

கோவை, டிச.11–

தமிழ்நாடு முதலமைச் சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அறிவுறுத்தலின்படியும், இந்து சமய அறநிலையத்துறையின்ப கட்டுப்பாட்டிலுள்ளத திருக்கோயில்களுக்குச்H சொந்தமான சொத்துக்கள் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் 08.12.2025 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம், அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயிலுக்கு சொந்தமான ரூ.100 கோடி மதிப்பிலான சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டுள்ளது.

கோயம்புத்தூர் மாவட்டம், உக்கடம், ஒப்பணக்கார வீதியில் அமைந்துள்ள அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு வரசித்தி விநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான 80 சென்ட் நிலத்தில் 4 குடியிருப்புகள் மற்றும் 18 வணிக கடைகளை அமைத்து ஆக்கிரமிப்பு செய்திருந்தனர். திருக்கோயிலுக்கு சொந்தமான நிலத்தில் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்திருந்தவர்களை வெளியேற்றிட கோவை மண்டல இணை ஆணையர் அவர்களால் 2015 ஆம் ஆண்டில் சட்டப்பிரிவு 78ன்படி ஆக்கிரமிப்பினை அகற்றிட உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில் ஆக்கிரமிப்பாளர்கள் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் மற்றும் துறையின் செயலாளர் ஆகியோரிடம் செய்திருந்த மேல்முறையீடுகளும் தள்ளுபடி செய்யப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் ஆக்கிரமிப்பாளர் திரு. சரவணமூர்த்தி மற்றும் சிலர், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இவ்வழக்கை நடத்த மனுதாரர்கள் முன்வராததால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் இவ்வழக்கினை தள்ளுபடி செய்து, திருக்கோயில் நிர்வாகம் ஆக்கிரமிப்பை அகற்றிட நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிட்டது.

அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78 மற்றும் 79ன் கீழ் தொடரப்பட்ட வழக்கு மற்றும் உயர்நீதிமன்ற பேராணை உத்தரவுகளின்படி, கோவை மண்டல இணை ஆணையர் பெ.ரமேஷ் அவர்களின் உத்தரவின்படி, உதவி ஆணையர்கள் உ.ச.கைலாஷமூர்த்தி மற்றும் திருமதி.மு.இரத்தினாம்பாள் ஆகியோர் முன்னிலையில் காவல்துறை உதவியுடன் திருக்கோயிலுக்கு சொந்தமான 80 சென்ட் நிலம் ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட்டு திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறப்பட்டது. இதன் தற்போதைய சந்தை மதிப்பு ரூ. 100 கோடியாகும்.

இதுவரை இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள 1,063 திருக்கோயில்களுக்கு சொந்தமான ரூ.8,230.55 கோடி மதிப்பிலான 8,024.43 ஏக்கர் திருக்கோயில் சொத்துகள் ஆக்கிரமிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின் போது, இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர்கள் திருமதி.ரா.விஜயலட்சுமி, ரா.செந்தில்குமார், காவல்துறை துணை ஆணையர் கார்த்திகேயன், உதவி ஆணையர் முருகேசன், தனி வட்டாட்சியர் (ஆலய நிலங்கள்) திருமதி.பரமேஸ்வரி, செயல் அலுவலர், ஆய்வாளர்கள் மற்றும் திருக்கோயில் பணியாளர்கள் உடனிருந்தனர்.



கோவை மாநகர் மாவட்டம் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட SIR பணிகள் மற்றும் பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆய்வுக்கூட்டம் கோவை மாநகர் மாவட்ட கழகப் பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் முத்துவேல் ராமசாமி, கோவை மாவட்ட துணை செயலாளர் தளபதி இளங்கோ, வே.பாலசுப்பிரமணியன், இரா.மணிகண்டன், நோயால் செல்வம், எ.ஏஸ். நடராஜ், எஸ்.எம்.சாமி, மோகன்ராஜ், ம.நாகராஜ், சேரலாதன், அன்பழகன், சிங்கை சிவா, கஸ்தூரி அருண், ஷேக் அப்துல்லா உள்பட வட்டக் கழக செயலாளர்கள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மாவட்டம் வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆய்வுக் கூட்டம்!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!



சென்னை, டிச.11–

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கூட்டரங்கில், மாவட்ட வாரியாக சுற்றுலா திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைப்பெற்றது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (09.12.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் அவர்களின் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் நடத்தப்பட்டு வரும் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் மற்றும் சுற்றுலா குறித்து மண்டல மேலாளர்கள், மேலாளர்கள் மற்றும் பொறியாளர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் மாவட்ட வாரியாக பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுற்றுலாத்துறையில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் ஈர்க்கும் வகையில் நம் பாரம்பரிய மிக்க தொன்மை வாய்ந்த பிரசித்திபெற்ற கோவில்கள், புராதான சின்னங்கள் மற்றும் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி வால்பாறை போன்ற இயற்கையாக அமையப் பெற்ற மலைவாச சுற்றுலாத் தலங்கள். தமிழ்நாட்டின் மாவட்ட வாரியாக சுற்றுலா தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் குறித்தும் மாவட்டந்தோறும் வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளுக்கு சுற்றுலா தலங்களில் போக்குவரத்து முதற்கொண்டு, விருந்தோம்பல் போன்ற அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்படுத்திதரவேண்டுமென சுற்றுலா உயர் அதிகாரிகள் மற்றும் சுற்றுலா அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. ராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகள், உணவு விடுதிகள், படகு குழாம்கள் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பலதரப்பட்ட அனைத்து உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கு ஏற்றார்போல் உணவு வழங்கி விருந்தோம்பலில் சிறப்புடன் திகழவேண்டுமெனவும் அடிப்படை வசதிகளில் குறைகள் இருப்பின் அதனை உடனடியாக சரிசெய்து விருந்தினர்களை நல்லமுறையில் நடத்த வேண்டுமென்றும், அனைத்து மண்டல அலகுகளிலும் வரவுசெலவு மற்றும் விருந்தினர்களிடம் விருந்தோம்பல் குறித்த தகவல்களை மண்டல மேலாளர் மற்றும் மேலாளர்களுடன் உரையாற்றி மேலும், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக, விருந்தோம்பல் சேவையை மேலும் சிறப்பாக நடத்த வேண்டுமென்று மண்டல மேலாளர்கள் மற்றும் மேலாளர்களுக்கு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில், சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், சுற்றுலா இயக்குநர், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், சுற்றுலாத்துறை இணை இயக்குனர் திருமதி. அ. சிவப்பிரியா, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி. சி.லட்சுமி பிரியா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டாமல் தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய

# மாற்றுத்திறனாளிகளின் மறுவாழ்வு நிதியை உடனே விடுவித்திடுக!

### நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் வலியுறுத்தல்!



புதுடெல்லி, டிச.11–

மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு நிதியை மாநிலங்களுக்கு ஒதுக்குவதில் பாரபட்சம், மீண்டும் மீண்டும் வேலையைக் காட்டும் ஒன்றிய அரசு எனவும் பாரபட்சத்தை நிறுத்திக் கொள்வதுடன், நிதியைஉடனடியாக விடுவிக்க வேண்டுமெனவும் கே.இ.பிரகாஷ் எம்.பி. வலியுறுத்தினார்.

மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்விற்கான தீன்தயாள் நிதி முழுமையாக செலவு செய்யப்படவில்லை என்று நாடாளுமன்ற குழு தெரிவித்த கருத்துகளை சுட்டிக் காட்டி, உண்மையான தரவுகளைக் கேட்டு, ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையிடம் நாடாளுமன்றத்தில் ஈரோடு கே.இ.பிரகாஷ் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அதன் அமைச்சர் அளித்துள்ள பதில், ஒன்றிய அரசு அந்த நிதியைபல்வேறு மாநிலங்களுக்கு, குறிப்பாக தமிழ்நாட்டிற்கு முறையாக ஒதுக்கவில்லைஎன்பது வெளிப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுடன் ஒப்பிடக்கூடிய மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைவைத்துப் பார்த்தால், 10 மடங்கு நிதி நமக்கு குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

இது தமிழ்நாட்டு மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசு இழைத்து வரும் ஈவு இரக்கமற்ற துரோகம்.

நாடாளுமன்றக் குழுவின் குற்றச்சாட்டை திட்டமிட்டு மறைக்கும் ஒன்றிய அரசு:

தீன்தயாள் நிதியை முழுமையாகச் செலவு செய்யாதது மற்றும் பயனாளர்களின் எண்ணிக்கைகுறைக்கப்பட்டிருப்பது ஆகியவற்றை நாடாளுமன்றக் குழு கடுமையாகக் கண்டித்ததா என்ற எனது கேள்விக்கு, ஒன்றிய அமைச்சர் நேரடியான பதில் அளிக்காமல் தவிர்த்திருக்கிறார். "மொத்தச் செலவினம் அதிகரித்துள்ளது என்று கண்துடைப்பாக ஒரு அட்டவணையைமட்டும் சமர்ப்பித்திருக்கிறார்.

நிதிப் பயன்பாடு குறித்த உண்மையான காரணத்தைமறைப்பதும், பயனாளர்கள் குறைப்பை ஏற்க மறுப்பதும் ஒன்றிய அரசின் நிர்வாகத் திறமையின்மைமற்றும் அடிப்படைநேர்மையின்மையை பட்டவர்த்தனமாகப் பிரதிபலிக்கிறது.

தமிழ்நாட்டிற்கு எதிராக தொடரும் நிதிப் பாரபட்சம்:

தீன்தயாள் நிதி என்பது 100% ஒன்றிய அரசின் நிதி. திட்ட முன்மொழிவுகளை (PROJECT PROPOSALS) மாநிலம் பரிந்துரைத்தாலும், இறுதி ஒப்புதல் மற்றும் நிதி விடுவிப்பைசெய்ய வேண்டியது ஒன்றிய அரசே. இந்த நிலையில், கடந்த 5 ஆண்டுகளின் தரவுகளை ஒப்பிடும் போது, தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிதி மற்றும் திட்ட ஒப்புதல்கள் மிகமிகக் குறைவாக உள்ளன.

உதாரணத்திற்கு, 202425 நிதியாண்டை எடுத்துக்கொண்டால், தமிழ்நாட்டிற்கு 11 திட்டங்களுக்கு மட்டுமேஒப்புதலும், 2.60 கோடி நிதியும் மட்டுமேஒன்றிய அரசு வழங்கியிருக்கிறது. அதுவே, உத்தரப் பிரதேசத்திற்கு 43 திட்டங் களுக்கு, 18.96 கோடியும், ஆந்திரப் பிரதேசத்திற்கு 73 திட்டங்களுக்கு 26.50 கோடியும் தாராளமாக வழங்கியுள்ளது.

தமிழ்நாடு, மாற்றுத்திறனாளிகள் நலனில் பெரிதும் அக்கறை கொண்ட, அதற்காக சிறப்பான நிறுவனங்களையும், உள்கட்டமைப்பையும் பேணி வரும் மாநிலம் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை. இப்படிப்பட்ட தமிழ்நாட்டிற்கு குறைவான திட்டங்களுக்கு மட்டுமேஒப்புதல் அளிப்பதும், மிகச்சொற்ப நிதியை மட்டுமேஒதுக்குவதும் திட்டமிட்ட சதிச்செயல். இது மாற்றுத்திறனாளிகளுக்கு ஒன்றிய அரசு இழைத்திருக்கும் துரோகம்.

தமிழ்நாட்டில் இருந்து முன்மொழியப்பட்ட திட்டங்கள் நிராகரிக்கப்பட்டதா அல்லது ஒன்றிய அரசு தாமதித்ததா என்பதை குறிப்பிடாமல் ஒன்றிய அமைச்சர் மழுப்பியிருப்பதே, அவர்களின் துரோகத்திற்கான வெளிப்படைஆதாரம்.

தீன்தயாள் நிதியை முழுமையாகப் பயன்படுத்தாததற்கும், பயனாளர்களைகுறைத்ததற்கும் பொறுப்பானவர்கள் மீது ஒன்றிய சமூக நீதித்துறைதக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நிதி மட்டுமல்லாமல், பொதுவாகவேபல்வேறு திட்டங்களின் நிதி ஒதுக்கீட்டில் மாநிலங்களுக்கு இடையேகாட்டும் பாரபட்சத்தைநிறுத்திக்கொண்டு, நியாயமான நிதிப்பகிர்வைஉறுதிசெய்ய வேண்டும். மேலும், தமிழ்நாட்டிற்கு கிடைக்க வேண்டிய தீன்தயாள் நிதி உட்பட அனைத்து நிதியையும், உடனடியாக விடுவிக்க வேண்டும்.

இவ்வாறு கே.இ. பிரகாஷ் வலியுறுத்தியுள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர், கழக இளைஞர் அணி செயலாளர் இளந்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 49வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை தெற்கு மாவட்டம், பொள்ளாச்சி நகர இளைஞர் அணி இளைஞரணி அமைப்பாளர் வி.யுவராஜ் ஏற்பாட்டில் 12 அணிகள் பங்கேற்ற மாநில அளவிலான கூடைப்பந்து போட்டியினை கோவை தெற்கு மாவட்ட கழக செயலாளர் தளபதி முருகேசன் துவக்கி வைத்தார். இதில் கே.எம்.நாகராஜ், சுப்பிரமணியம், ஜி.ஏ.அதிபதி, மு.க.முத்து, ஆச்சிபட்டி பாலு, ஜெயக்குமார், ரகு துரைராஜ், ராஜு, நவநீதகிருஷ்ணன், சியாமளா நவநீதகிருஷ்ணன், மணிமாறன், நித்தியானந்தம், சக்திவேல் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.